தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நதி நீர் பிரச்னைகள்: வெற்றி மேல் வெற்றி!



**சென்னை,**

கேரளத்துடன் முல்லைப் பெரியாறு, கர்நாடகத்துடன் காவிரி நதிநீர்...

இப்படி தமிழகம் தனது தாகத்தை தீர்ப்பதற்கான போராட்டத்தை அண்டை மாநிலங்களுடன் நித்தம் நித்தம் நடத்த வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த மிக முக்கிய ஜீவாதாரப் பிரச்னைகளில் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு தொடர் சட்டப் போராட்டங்களை நடத்தியதுடன், அதில் வெற்றியும் கண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் கடந்த ஆண்டு பிப்ரவரி 19-ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட தருணத்தை தனது 22 ஆண்டுக்கால போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என குறிப்பிட்டார் முதல்வர் ஜெயலலிதா. இது காவிரி நதிநீர் பிரச்னையில் தமிழக அரசுக்கு, கடந்த ஆண்டு கிடைத்த முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும். இந்த ஆண்டு முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னையில் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு முக்கியமான சாதனையைப் பதிவு செய்துள்ளது. அந்த அணை பிரச்னை

தொடர்பான வழக்கில் தீர்ப்பு கூறிய உச்ச நீதிமன்றம், அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ள அனுமதித்துள்ளது. இந்த இரு அணைப் பிரச்னைகளிலும் தமிழக அரசின் நிலைப்பாட்டாலும், இடைவிடாது நடத்திய சட்டப் போராட்டங்களாலும் மாபெரும் வெற்றிகள் கிடைத்துள்ளன.

**காவிரி நதிநீர் பிரச்னை**: காவிரி நதிநீர் பிரச்னை என்பது சுமார் 23 ஆண்டுகளாக இரு மாநிலங்களுக்கு இடையே நடைபெற்று வருகிறது. மத்திய அரசின் தலைமையின் கீழ் 26 முறை கூட்டங்கள் கூடி விவாதித்தும் தீர்வினைக் காணமுடியவில்லை. இறுதியாக, காவிரி நதிநீர் பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, நடுவர் மன்றம் கடந்த 1990-ஆம் ஆண்டு ஜூன் 2-ஆம் தேதி அமைக்கப்பட்டது. இந்த நடுவர் மன்றம் கடந்த 1991-ஆம் ஆண்டு ஜூன் 25-ஆம் தேதியன்று இடைக்கால உத்தரவினை வழங்கியது. அதன்படி, தமிழகத்தின் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் ஆண்டுதோறும் ஒருகுறிப்பிட்ட மாதாந்திர அடிப்படையில் 205 டி.எம்.சி. நீர் வழங்குவதை கர்நாடகம் உறுதிப்படுத்த வேண்டும் என கூறியது.

இந்த இடைக்கால உத்தரவைச் செயல்படுத்தும் வகையில், அது 1998-ஆம் ஆண்டில் மத்திய அரசால் அரசிதழில் வெளியிடப்பட்டது. நடுவர் மன்றம் வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும், புள்ளி விவரங்களையும் நன்கு ஆராய்ந்து தனது இறுதி உத்தரவை கடந்த 2007-ஆம் ஆண்டு பிப்ரவரி 5-ஆம் தேதி அளித்தது. இந்த இறுதி உத்தரவை எதிர்த்து கர்நாடகம்-கேரள மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தன. இதனிடையே, நடுவர் மன்ற இறுதி உத்தரவில் தமிழகத்துக்கு பாதகமாய் உள்ள ஒருசில பகுதிகளை மேல் ஆய்வு செய்யக் கோரி சிறப்பு முறையீட்டு மனுவை தமிழக அரசும் தாக்கல் செய்தது. இந்த மனுக்கள் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வந்தன.

**மத்திய அரசிதழில் வெளியீடு:** காவிரி நதிநீர் பிரச்னையில் உச்ச நீதிமன்றத்தின் மூலமாக சட்டப் போராட்டத்தை ஒருபக்கம் நடத்த, காவிரி நடுவர் மன்ற இறுதி உத்தரவை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடுவதற்கு அரசு ரீதியான நடவடிக்கைகளையும் முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து மேற்கொண்டார். கடந்த 2011-ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் தேதியன்று புது தில்லியில் பிரதமரைச் சந்தித்து, நடுவர் மன்ற இறுதி உத்தரவை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென

கோரிக்கை விடுத்தார். மேலும், இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த காவிரி நீர் மேலாண்மை வாரியம் என்ற அமைப்பை ஏற்படுத்தவும் கோரிக்கை விடுத்தார்.

இதனிடையே, நடுவர் மன்றத்தின் இறுதி உத்தரவை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்கு தடை ஏதும் இல்லையென அனைத்து மாநில மூத்த வழக்குரைஞர்களின் கருத்துகளும் உச்ச நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, 2013-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் தேதிக்குள் இறுதி உத்தரவை அரசிதழில் வெளியிட வேண்டும் என மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படியே உத்தரவும் வெளியிடப்பட்டது. இதுவே, தனது 22 ஆண்டுகால போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என்று முதல்வர் ஜெயலலிதா குறிப்பிட்டார்.

இந்தச் சாதனைக்கு மகுடம் வைத்தாற்போன்று, இப்போது முல்லைப் பெரியாறு பிரச்னையிலும் தமிழக அரசுக்கு வெற்றி கிடைத்துள்ளது. கேரள மாநிலத்திலுள்ள முல்லைப் பெரியாறு அணையின் மூலமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களும் பயன்பெற்று வருகின்றன. ஆனால், அந்த மாவட்டங்களுக்குச் செல்லும் நீரினைத் தடுக்கும் வகையில் அணையின் நீர்த் தேக்க அளவை 152 அடியிலிருந்து தாற்காலிமாக 136 அடியாகக் குறைக்க அந்த மாநில அரசு முடிவு செய்தது.

இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் தமிழகத்துக்குச் சாதகமாக தீர்ப்பு கிடைத்தது. இந்தத் தீர்ப்பை முடக்கும் வகையில், கேரள மாநில அரசு தனது நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள பாதுகாப்புச் சட்டத்தை திருத்தியது. இதை எதிர்த்தும் உச்ச நீதிமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு பல்வேறு நிலைகளைத் தாண்டி இப்போது தமிழகத்துக்கு நலன் பயக்கும் வகையில் தீர்ப்பு கிடைத்துள்ளது. அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் எனவும், இதற்கென தனியாக கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டுமெனவும் உச்ச நீதிமன்றம் கடந்த மே 7-ஆம் தேதியன்று தீர்ப்பு கூறியது. இந்தத் தீர்ப்பும் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு விடாது மேற்கொண்ட சட்டப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். கண்காணிப்புக் குழுவில் தமிழக அரசின் சார்பில் இடம்பெறும் பிரதிநிதியை, தீர்ப்பு வந்த உடனேயே முதல்வர் அறிவித்தார். மேலும், அணையில் பராமரிப்புப் பணிகளையும் தமிழக பொதுப் பணித்

துறையினர் மேற்கொண்டுள்ளனர். ஆனால், கேரள அரசோ, மத்திய அரசோ இந்த விஷயத்தில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. இவ்வாறு நதிநீர் தாவாக்களில் முதல்வரால் எடுக்கப்பட்டு வரும் தொடர் நடவடிக்கைகளால் தமிழக மக்கள் குறிப்பாக விவசாயிகளின் நலன்கள் பெரிதும் காக்கப்பட்டு வருவது மட்டும் நிஜம்!

## வேளாண் துறைக்கு கூடுதல் முக்கியத்துவம் தரும் முதல்வர்

**உதகை,**

வேளாண்மைத் துறைக்கு முதல்வர் ஜெயலலிதா கூடுதல் முக்கியத்துவம் அளிப்பதாக, உதகை மலர்க்காட்சி தொடக்க விழாவில் வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார்.

உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் மேலும் பேசியது:

தமிழகத்தில் 2011-12ம் நிதியாண்டில் வேளாண்மைத் துறைக்கு ரூ.2,882 கோடி நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், 2014-15ம் நிதியாண்டிற்கு ரூ.5,360 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் துறைகளிலேயே வேளாண்மைத் துறையை சர்வதேச அரங்கில் முதலிடத்திற்கு கொண்டு வருவதற்காக முதல்வர் ஜெயலலிதா கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருகிறார். சட்டப்பேரவைத் தேர்தலுக்கு அவர் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார். ஆண்டுதோறும் 20 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் கடந்த ஆண்டு மலர்க்காட்சி நாள்களில் மட்டும் 1,20,794 பேர் கண்டுகளித்துள்ளனர். இந்தாண்டில் இது மேலும் அதிகரிக்கும். கடந்த 3 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.72 லட்சம் மதிப்பீட்டில் இடுபொருள்கள் மானியத்தில் வழங்கப்பட்டதில் 3,773 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மலைப்பகுதி மேம்பாடுத் திட்டத்தின்கீழ் ரூ.391 லட்சம் மதிப்பீட்டில் காய்கறி விதைகள், ஆயில் என்ஜின், கைத்தெளிப்பான் போன்றவை மானிய விலையில் விநியோகிக்கப்பட்டதில் 14,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் ரூ.617 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப்பட்டு 1,678 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தேசிய நுண் நீர்ப் பாசனத் திட்டத்தில் ரூ.331

லட்சம் செலவிடப்பட்டதில் 1,740 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தமிழகத்தில் 25,000 ஹெக்டேர் பரப்பளவில் 1.75 லட்சம் டன் உதிரி மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில், நீலகிரி மாவட்டத்தில் காரனேசன் கொய் மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு தரமான நடவுச் செடிகள் மானிய விலையில் விநியோகிக்கும் வகையில், தும்மனட்டி அரசு தோட்டக்கலைப் பண்ணையில் ரூ.140 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பெரு நகர காய்கறி தொகுப்பு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.310 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் 700 ஹெக்டேரில் காய்கறி சாகுபடி செய்ய 75 சதவீத மானியத் திட்டத்தின்கீழ் 1,750 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்றார். மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் பேசுகையில், ஒவ்வொருவரும் தங்களது பிறந்த நாளையொட்டியோ அல்லது திருமண நாளையொட்டியோ ஏதாவது ஒரு மரக்கன்றை நட்டாலே தமிழகத்தில் ஓராண்டில் 7 கோடி மரக்கன்றுகளை நடவு செய்ய முடியும். இதன் மூலமாக பசுமைப் பரப்பு அதிகரித்து, மழை வளம் பெருகி விவசாயமும் செழிக்கும் என்பதால் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மரக்கன்று நடும் திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்றார்.

## உதகையில் மலர்க்காட்சி தொடக்கம்



**உதகை,**

உதகையில் அரசினர் தாவரவியல் பூங்காவில் நடைபெறும் இந்த மலர்க்காட்சியை வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார். 118-ஆவது ஆண்டாக நடைபெறும் இம் மலர்க்காட்சியில் இன்கா மெரிகோல்டு,

பிரெஞ்சு மெரிகோல்டு, பிளாக்ஸ், பெட்டூனியா, பேன்சி, டயான்தஸ், பிகோனியா, டேலியா, பால்சம், ரெனன்குலஸ், வயோலா, அஜிரேட்டம், கேலண்டூலா, கிளாடியோலஸ், லில்லியம் உள்ளிட்ட 3 லட்சம் மலர்கள் பூத்துக் குலுங்கியது பூங்காவுக்கு வந்திருந்த பார்வையாளர்களைக் கவர்ந்தது. அத்துடன், 50,000 மலர்த்தொட்டிகளும் பார்வையாளர் மாடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இக் கண்காட்சியையொட்டி பூங்காவின் மையப் பகுதியில் 70,000 ரோஜா மலர்களைக் கொண்டு 60 அடி நீளத்திலும், 10 அடி உயரத்திலும், 8 அடி அகலத்திலும் மோனோ ரயில் உருவாக்கப்பட்டிருந்தது. அதேபோல, நீலகிரியின் பழங்குடிகளான தோடரின மக்களின் வாழ்விடத்தைச் சித்தரிக்கும் வகையில் 8,000 ஜெர்பரா மலர்களைக் கொண்டு தோடர் குடிலும், காரனேசன் மலர்களைக் கொண்டு தோடர் குடும்பமும், காட்டுப்பாறை பாசிகளைக் கொண்டு தோடர்களின் விலங்கான எருமையின் அமைப்பும் உருவாக்கப்பட்டிருந்தது.

பூங்காவின் நுழைவாயிலிலிருந்து 10 அடி உயரத்தில் 10 மலர் அலங்கார வளைவுகள் 10,000 மலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தன. அத்துடன், பூங்காவின் நுழைவாயில் கதவு 4,000 மலர்களைக் கொண்டு வண்ணத்துப் பூச்சியைப்போல வடிவமைக்கப்பட்டிருந்தது.

மேலும், கொய் மலர்களான ரோஜா, காரனேசன், ஜெர்பரா, சாமந்தி, ஆந்தூரியம், கிளாடியோலஸ், ஆர்கிட், லில்லியம், பிகோனியா மற்றும் துலிப் உள்ளிட்ட மலர்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ராஜ் பவன், எம்.ஆர்.சி. ராணுவ மையம், ராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி, ஜேஎஸ்எஸ் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் உள்ளிட்டவை சார்பில் 15-க்கும் மேற்பட்ட காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

வெலிங்டன் எம்ஆர்சி ராணுவ மையம் சார்பில் ராணுவ இசை நிகழ்ச்சியும், கேரள மாநிலத்தின் செண்டை மேள வாத்தியமும், திபெத்தியர் நலவாழ்வுச் சங்கம் சார்பில் பனி சிங்கம் மற்றும் திபெத்திய பழங்குடியினரின் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## சென்னையில் 110 டிகிரி வெயில்; 10 ஆண்டுகளில் அதிகம்: இயல்பு வாழ்க்கை பாதிப்பு



**சென்னை,**

சென்னையில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவில் வெள்ளிக்கிழமை 110 டிகிரி வெயில் (மே 23) பதிவானது.

தமிழகத்தில் கத்திரி வெயில் மழையுடன் தொடங்கியது. இதனால் கத்திரி தொடங்கிய முதல் ஒரு வாரம் வெயிலின் தாக்கம் மிகக் குறைவாக இருந்தது. ஆனால் அதன்பிறகு படிப்படியாக வெயில் அதிகரித்து வந்தது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் கொளுத்துகிறது. கடந்த இரு தினங்களாக வெயிலின் உக்கிரம் அதிகரித்துள்ளது. இதனால் பகல் வேளைகளில் வெளியே செல்ல முடியாமல் பொதுமக்கள் வீட்டிலேயே முடங்கியுள்ளனர்.

**சென்னையில் அதிகம்**: சென்னையில் வியாழக்கிழமை (மே 22) 108 டிகிரி வெயில் பதிவானது. வெள்ளிக்கிழமை (மே 23) மேலும் அதிகரித்து 110 டிகிரி வெயில் பதிவானது. கடந்த 2004-ஆம் ஆண்டில் இருந்து இதுவரை கோடையில் பதிவான வெயிலில் இதுதான் அதிகம். 2004 ஆம் ஆண்டு மே 16-ஆம் தேதி சென்னையில் 109 டிகிரி வெயில் பதிவானது.

அதற்கு முன்னர் 2003-ஆம் ஆண்டில் மே 31-ஆம் தேதி சென்னையில் 113 டிகிரி வெயில் பதிவானது. இதுவே இதுவரை உள்ள தகவல்களின் அடிப்படையில் அதிகபட்சமாகும்.

**இயல்பு வாழ்க்கை**: சென்னையில் கடும் வெயில் காரணமாக, கடந்த இரு தினங்களாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலானோர் பகல் வேளையில் வெளியில் செல்லவே தயங்குகின்றனர். கடும் வெப்பத்துடன் அனல் காற்றும் வீசி வருகிறது. எப்போதும் நெரிசலாகக் காணப்படும் சென்னையின் முக்கிய சாலைகளில் கடந்த இரு தினங்களாக போக்குவரத்தும் குறைந்துள்ளது. அனல் காற்றால் இருசக்கர வாகனங்களில் செல்வோர் கடும் அவதிப்பட்டனர்.

**வலுவிழக்கும் காற்றழுத்த தாழ்வு நிலை**: இந்த நிலையில் வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், காற்றழுத்த தாழ்வு நிலையாக வலுவிழந்துள்ளது. அதே வேளையில் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், வேலூர் ஆகிய மாவட்டங்களில் வெப்பச்சலனத்தின் காரணமாக மழை பெய்துள்ளது.

வெள்ளிக்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்): சென்னை - 110, வேலூர், திருச்சி, புதுச்சேரி - 105, கடலூர், மதுரை - 102, கரூர் பரமத்தி - 101, சேலம் - 100, தருமபுரி - 98, கோவை, பாளையங்கோட்டை - 97, கொடைக்கானல் - 73.

## சேலத்தில் 25.80 மில்லி மீட்டர் மழை

**சேலம்,**

சேலம் மாநகரில் வியாழக்கிழமை இரவு 25.80 மில்லி மீட்டர் மழை பதிவானது.

சேலம் மாவட்டத்தில் அக்னி வெயில் கொளுத்தி வந்த நிலையில், கடந்த சில நாள்களாக கோடை வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது. இந்த நிலையில், வியாழக்கிழமை இரவு திடீரென சூறாவளிக் காற்று, இடி - மினலுடன் மழை பெய்தது. சுமார் 3 மணி நேரத்துக்கும் அதிகமான நேரம் இந்த மழை நீடித்தது. சேலம் மாநகரில் மட்டும் 25.80 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது. இதைத் தவிர ஓமலூரில் 10 மி. மீ. மழையும், ஏற்காட்டில் 5.40 மி. மீ, வாழப்பாடியில் ஒரு மில்லி மீட்டர் மழையும் பெய்திருந்தன. சேலம் மாநகரில் வியாழக்கிழமை இரவு வீசிய சூறாவளிக் காற்றால் பல இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்தன. ஏராளமான இடங்களில் மரக் கிளைகள் முறிந்து சாலையில் விழுந்தன.சேலம் சீரங்கபாளையம் மேயர் குடியிருப்பின் பின் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் இருந்த சுமார் 50 ஆண்டுகள் பழமையான மரம் சூறாவளிக் காற்றில் வேருடன் சாய்ந்து விழுந்தது. மாநகராட்சியின் கொசு மருந்து

தெளிக்கும் லாரியின் மீதும், நிழல்கூடத்தின் மீதும் மரம் விழுந்ததால் அவைகள் சேதம் அடைந்தன. சேதமடைந்த வாகனத்தை மேயர் எஸ்.செளண்டப்பன், துணை மேயர் நடேசன், மாநகராட்சி அதிகாரிகள் உள்ளிட்டோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதற்கிடையே, சேலம் மாநகரில் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் மீண்டும் சூறாவளிக் காற்று வீசியது. இடி -மின்னலுடன் வீசிய சூறாவளிக் காற்றால் மேலும் பல இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. மேலும், மாநகரம் முழுவதிலும் மின்வெட்டு ஏற்பட்டது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**மேட்டூர்,**

மேட்டூர் அணைக்கு வெள்ளிக்கிழமை காலை நீர்வரத்து அதிகரித்தது.

மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும், காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு வியாழக்கிழமை நொடிக்கு 1,207 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.

இது வெள்ளிக்கிழமை காலை நொடிக்கு 2,768 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரித்ததாலும் குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கன அடி மட்டுமே தண்ணீர் திறந்துவிடுவதாலும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மெல்ல உயரத் தொடங்கியுள்ளது. நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை 35.80அடியாக இருந்தது. நீர்இருப்பு 10.07 டி.எம்.சி.யாக இருந்தது.

## அன்னவாசலில்வட்டார விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசலில் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு வட்டார விவசாய ஆலோசனைக் குழுத் தலைவர் சாம்பசிவம் தலைமை வகித்தார். அன்னவாசல் வட்டார தொழில்நுட்ப அமைப்பாளர் மற்றும் வேளாண் உதவி இயக்குநர்

சிங்காரம் முன்னிலை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரவிராஜன் தீர்மானங்களை வாசித்தார்.

இதில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை - விரிவாக்க சீரமைப்பு திட்டம் 2014-2015-ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் கற்றறிவுப் பயணம், வட்டார அளவில் குழுக்கள் அமைத்தல், உழவர் நண்பர்களின் மதிப்பூதியம் போன்ற பல்வேறு செயல்திட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மே 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மே 28-ம் தேதி நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அகமது. இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மே 28-ம் தேதி காலை 10 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், கடனுதவிகள், வேளாண் இடுபொருள்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத் திட்டங்கள் மற்றும் முறையீடுகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று தங்கது குறைகளை தெரிவிக்கலாம்.

## ஆலங்குளம் காய்கனிச் சந்தையில் மாங்காய் கிலோ ரூ. 5-க்கு விற்பனை

**ஆலங்குளம்,**

ஆலங்குளம் காய்கனிச் சந்தையில் மாங்காய் கிலோ ரூ.5-க்கு விற்பனையாகிறது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் கத்தரி ரூ. 100- க்கு விற்கும் நிலையில் ஆலங்குளத்தில் கிலோ ரூ. 50க்கு விற்பனையாகிறது.

ஆலங்குளம் காய்கனிச் சந்தை மாவட்ட அளவில் பிரசித்தி பெற்றது. மற்ற ஊர்களைக் காட்டிலும் இங்கு காய்கனிகளின் விலை சற்று குறைவாகத்தான் இருக்கும். இந்நிலையில் மாவட்டத்தின் பிற பகுதிகளில் வியாழக்கிழமை,

கத்தரிக்காய் கிலோ ரூ.100-க்கு விற்கப்பட்டது. ஆனால் ஆலங்குளத்தில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கத்தரிக்காய் கிலோ ஒன்றிற்கு ரூ. 50 என விற்கப்பட்டது. மேலும் மற்ற காய்கனிகளின் விலை விவரம்: கேரட் ரூ.30, பீன்ஸ் ரூ. 60, சிறிய வெங்காயம் ரூ. 25, பெரிய வெங்காயம் ரூ. 18-20, வெண்டைக்காய் ரூ. 10, புடலை ரூ. 20, சுரை ரூ. 5, முருங்கை ரூ. 10-15, சேனை ரூ. 20, உருளை ரூ. 25, மிளகாய் ரூ. 30, கோஸ் ரூ. 15, காலிபிளவர் ரூ. 50, தக்காளி ரூ. 20, இஞ்சி

ரூ. 120. தற்போது மாங்காய் சீசன் என்பதால் அதன் வரத்து அதிகரித்துள்ள நிலையில் நாட்டு மாங்காய் கிலோ ஒன்றிற்கு ரூ.5க்கும் கிளிமூக்கு மாங்காய் கிலோ ரூ. 10க்கும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவது விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது.

## திட்டக்குடியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

**கடலூர்,**

திட்டக்குடி பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை பலத்த காற்றுடன் ஒரு மணி நேரம் மழை பெய்தது. தமிழகத்தில் கத்தரி வெயில் துவங்கியதைத் தொடர்ந்து கடுமையான அனல் காற்று வீசி வருகிறது. இந்நிலையில், திட்டக்குடி பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர், பலத்த காற்றுடன் திடீரென மழை பெய்தது. இந்த மழை ஒரு மணி நேரத்திற்கும் மேல் நீடித்தது. கடந்த 10 நாள்களாக கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வரும் நிலையில், திட்டக்குடி பகுதியில் மழை இல்லை.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## அடுமனை தொழில்நுட்ப பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

**பெங்களூரு,**

பெங்களூரு விவசாய அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் நடத்தப்படும் அடுமனை தொழில்நுட்பப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து விவசாய அறிவியல் பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பல்கலைக்கழகத்தின் அடுமனை தொழில்நுட்பப் பிரிவு சார்பில், ஹெப்பாளில் உள்ள மையத்தில் 14 வாரங்கள் நடைபெறும் அடுமனை தொழில்நுட்ப சான்றிதழ் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

எஸ்எஸ்எல்சி தேர்ச்சி பெற்றுள்ளோர் இதற்கு விண்ணப்பிக்கலாம். 080-23513370 தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சேர்க்கையை உறுதி செய்யலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டக்கலைப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

**பெங்களூரு,**

கர்நாடக அரசு நடத்தும் தோட்டக்கலைப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள்

வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து மாநில தோட்டக்கலைத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தோட்டக்கலைத் துறை சார்பில், பெங்களூரு லால் பாக் தோட்டக்கலை பயிற்சி மையத்தில் அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து 2015 மார்ச் 31-ஆம் தேதி வரை 10 மாதங்களுக்கான தோட்டக்கலைப் பயிற்சி நடைபெறுகிறது.

இதில் பெங்களூரு ஊரகம், பெங்களூரு நகரம், தும்கூர், ராமநகரம், சிக்பளாப்பூர், கோலார் மாவட்டங்களைச் சேர்ந்த தகுதி வாய்ந்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. எஸ்எஸ்எல்சி தேர்ச்சி பெற்றுள்ள 18 முதல் 33 வயதுள்ள இளைஞர்கள் இந்தப் பயிற்சி வகுப்பில் சேர விண்ணப்பிக்கலாம். இவர்கள் விவசாயிகளின் வாரிசுகளாக இருக்க வேண்டும். சொந்த ஊரில் நிலம் வைத்திருக்க வேண்டும். இதற்கு ஆதாரமாக நிலப் பட்டா நகலை ஒப்படைக்க வேண்டும்.

பயிற்சி காலத்தில் மையத்திலே தங்கி படிக்க வேண்டும். ஊக்கத்தொகையாக மாதந்தோறும் ரூ. 750 வழங்கப்படும். விண்ணப்பங்களை வருகிற 25-ஆம் தேதி மாலை 5.30 மணிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகங்களில் சமர்பிக்க வேண்டும்.

இதையடுத்து, வருகிற 28-ஆம் தேதி நடைபெறும் நேர்காணல் மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உணவு உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு இலக்கு நிர்ணயம்:ஊட்டியில் வேளாண் துறை அமைச்சர் தகவல்**

தமிழகத்தில், நடப்பாண்டின் உணவு உற்பத்தியை 145 லட்சம் டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது' என, வேளாண்மை துறை அமைச்சர் கூறினார். நீலகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலை துறை சார்பில், ஊட்டி தாவரவியல் பூங்காவில், 118வது மலர் கண்காட்சி நேற்று துவங்கியது.

மலர் கண்காட்சியை துவக்கி வைத்து, வேளாண்மை துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேசியதாவது:

ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல், ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் மாநிலங்களான உ.பி., மகாராஷ்டிரா, ஆந்திரா மாநிலங்களின் வரிசையில், தமிழகமும் இணைந்துள்ளது.

கடந்த 2011- 12 ல், ஒரு லட்சத்து 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு, மாநில அரசு நிதி அறிக்கை தாக்கல் செய்தது; அதில், வேளாண்மை துறைக்கு மட்டும், 2,832 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 2012 - 13ல், வேளாண் துறைக்கு 4,830 கோடி ரூபாய்; 2013 -14ல் 5,189 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

நடப்பாண்டு நிதியாண்டில் வேளாண்மை துறைக்கு 5,360 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநில முதல்வரின் 'விஷன் 2023' திட்டத்தின் கீழ், ஒரு கோடியே 20 லட்சம் கோடி ரூபாய், வேளாண் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டு, உணவு உற்பத்தியில், 145 லட்சம் டன்களை எட்ட, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேசினார்.

**பாக்.,கில் சக்கை போடு போடும் இந்திய வாழைப்பழம்**



**மும்பை**:முக்கனிகளில் ஒன்றான வாழைப்பழம் உற்பத்தியில், இந்தியா முதல் - இடத்தில் உள்ளது. தனிச் சுவை கொண்ட இந்திய வாழைப்பழங்களுக்கு, உலகளவில் அதிக வரவேற்பு இல்லாவிட்டாலும், பாகிஸ்தானில் அதற்கு கிராக்கி அதிகரித்து வருகிறது. இதனால், அந்நாட்டிற்கான வாழை ஏற்றுமதி சூடு பிடித்துள்ளது. மகாராஷ்டிரா: இந்தியாவில் வாழை உற்பத்தியில், மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது. இம்மாநிலத்தில், 80 ஆயிரம் ஹெக்டரில், வாழை பயிரிடப்படுகிறது. இதில், ஜல்கான் மாவட்டத்தில் மட்டும், 50 ஆயிரம் ஹெக்டேர் அடங்கியுள்ளது.மாநிலத்தின் மொத்த வாழை உற்பத்தியில், ஜல்கான், மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டுள்ளது.

இங்கு, வாழை ஏற்றுமதியாளர்களின் நலனை காக்கும் பொருட்டு, மகாராஷ்டிர மாநில வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்தும் வாரியம் (எம்.எஸ்.ஏ.எம்.பீ.,) சார்பில், மகாபனானா என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுஉள்ளது.இந்த அமைப்பு, கடந்த இரண்டு ஆண்டுகளாக துபாய்க்கு சோதனை அடிப்படையில் வாழை ஏற்றுமதி மேற்கொண்டது. ஆனால், எதிர்பார்த்த அளவில், ஏற்றுமதி இல்லாததால், பாகிஸ்தான் பக்கம் கூடுதல் கவனத்தைச் செலுத்தியது.

அட்டை பெட்டி:இதன்படி, முதன் முறையாக, வாழைகளை, அட்டை பெட்டியில் வைத்து ஏற்றுமதி செய்யும் நடைமுறை துவங்கியது. சுகாதாரமான முறையில் அடைக்கப்பட்ட வாழைப்பழங்களை, பாகிஸ்தான் மக்கள் விரும்பி வாங்கத் துவங்கியுள்ளனர். இதனால், வாழை ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு, ஜல்கான் மாவட்டத்தில் இருந்து, 2,000 லாரிகளில் வாழை

ஏற்றுமதி செய்யப்பட்டது. நடப்பு பருவத்தில், நாள்தோறும், 90 லாரிகளில், வாழைகள் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு லாரியிலும், 1.5 டன் வாழைப்பழங்கள் உள்ளன. இந்த வகையில், கடந்த பருவத்தை விட, அதிக அளவில் வாழை ஏற்றுமதி இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயி-களுக்கு ஒரு குவிண்டால் வாழைக்கு, 1,000 ரூபாய் கிடைக்கிறது என, பனானா அமைப்பைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தடை:ஐரோப்பாவில் இந்தியாவின் அல்போன்சா மாம்பழங்களுக்கு தடை விதிக்-கப் பட்டுள்ள நிலையில், அங்கு வாழைகளை ஏற்றுமதி செய்ய, பல்வேறு நடவடிக்-கைகளை எடுக்க வேண்டியுள்ளது.ஆனால், அண்டை நாடான பாகிஸ்தானுக்கு வாழைகளை ஏற்றுமதி செய்வதில் எந்த பிரச்னையும் இல்லை. அதற்கேற்ப, அந் -நாட்டில் இந்திய வாழை களுக்கு வரவேற்பு பெருகி வருவதால், வரும் ஆண்டு-களில் ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## 4 நாட்களுக்கு வெப்பம் அதிகரிக்கும்

**சென்னை:**வங்கக்கடலில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், வலுவிழந்து, தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலை கொண்டுள்ளது.

இது மேலும், வலுவிழந்து மறையும் என கூறப்படுகிறது.

இதனால், சென்னையில் நேற்று, 42.6 டிகிரி செல்சியஸ் (109 டிகிரி பாரன்ஹீட்) வெப்பம் பதிவாகியுள்ளது.அக்னி நட்சத்திரம் கடந்த, 4ம் தேதி துவங்கி, வரும், 28ம் தேதி வரை உள்ளது.

அக்னி நட்சத்திரம் என்ற கத்திரி வெயில் முடிய, இன்னும் நான்கு நாட்களே உள்ள நிலையில், மற்ற இடங்களில் வெப்பத்தின் தாக்கம் மேலும் அதிகரிக்கக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மணக்குது ஊட்டி: கோடையில் ஒரு வசந்த காலம்**



**ஊட்டி**: குளுகுளு ஊட்டியில், கோலாகலமாக நேற்று துவங்கிய மலர் கண்காட்சியை, ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் கண்டுகளித்தனர். இக்கண்காட்சி நாளை நிறைவடைகிறது. நீலகிரி மாவட்டம், ஊட்டி தாவரவியல் பூங்காவில், 118வது மலர் கண்காட்சி, நேற்று துவங்கியது. காலை 9:30 மணிக்கு கண்காட்சியை, வேளாண் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, துவக்கி வைத்தார். கண்காட்சியின் நுழைவாயில் 4,000 கொய் மலர்களால், வண்ணத்துப் பூச்சியின் தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது. பத்து அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு லில்லியம், அல்ஸ்ட்ரோமேரியா, கார்னேஷன் என, 10 ஆயிரம் மலர்களை கொண்டு, அலங்கரிக்கப்பட்டிருந்தன. 118வது மலர் கண்காட்சி குறித்த வடிவமைப்பு, ரோஜா, கார்னேசன், ஜெர்பரா, சாமந்தி, ஆந்தூரியம், கிளாடியோலஸ், ஆர்கிட் என, 20 ஆயிரம் மலர்களால் வண்ணமயமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ 50 ஆயிரம் மலர் தொட்டிகளில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி மலர் செடிகளில் பூத்து குலுங்கிய மலர்கள், பார்வையாளர்களை கவர்ந்தன. நெதர்லாந்து நாட்டில் இருந்து வரவழைக்கப்பட்டு, 5 வண்ணங்களில், 1,000 தொட்டிகளில் வைக்கப்பட்டிருந்த, 'துலிப்' மலர்கள் பார்வைக்கு புதுமையாக இருந்தன. தவிர 60 அடி நீளம், 10 அடி அகலம், 8 அடி உயரத்தில், ஒரு லட்சம் ரோஜா மலர்களை கொண்டு, 'மோனோ' ரயிலின் தோற்றம் வடிவமைக்கப்பட்டு இருந்தது. மலைவாழ் மக்களான தோடர் இன மக்களின் வீடு (குடில்) 60 ஆயிரம் மலர்களை கொண்டு, 10 அடி நீளம், 8 அடி அகலத்தில் வடிவமைக்கப்பட்டு இருந்தது. தவிர, தோடர்களின் குலத் தொழிலான கால்நடை வளர்ப்பை

வெளிப்படுத்தும் வகையில், 'பாறை பாசி' என்ற பொருளால், எருமையின் தோற்றம் வடிவமைக்கப்பட்டு இருந்தது.

### காட்சி அரங்குகள்:

தோட்டக்கலை துறை சார்பில் வைக்கப்பட்டிருந்த காட்சி அரங்கில், நீலகிரியில் விளையும் அரிய வகை கொலுமிச்சை, ரம்பூட்டான், பெர்சின், வாசனை திரவிய பொருட்கள், பழம், காய்கறிகள் வைக்கப்பட்டிருந்தன. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், வெலிங்டன் ராணுவப் பயிற்சி கல்லூரி, வெலிங்டன் எம்.ஆர்.சி., ராணுவ முகாம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி என, தனியார் மற்றும் அரசு துறை காட்சி அரங்குகளில் பல வண்ண மலர்கள் வைக்கப்பட்டிருந்தன. மின் வாரியம் சார்பில், மின் உற்பத்தி நிலையம் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களின் தோற்றம் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டு, மின்சார்ந்த விபத்துகளை தவிர்ப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாநில வேளாண்மை துறை முதன்மை செயலர் சந்தீப் சக்சேனா, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை கமிஷனர் சத்யபிரதா சாகு, நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் ராமசாமி, 'தாட்கோ' தலைவர் கலைச்செல்வன், நீலகிரி எம்.பி.,யாக தேர்வான கோபாலகிருஷ்ணன், ராஜ்ய சபா எம்.பி., அர்ஜுனன் உட்பட பலர் பங்கேற்றனர். மூன்று நாள் மலர்கண்காட்சி நாளை மாலை நிறைவடைகிறது.

## வால்பேரி, பிளம்ஸ் விலை இரு மடங்காக உயர்வு

**ஊட்டி:**நீலகிரி மாவட்டத்தில் விளையும் வால்பேரிக்காய், பிளம்ஸ் பழங்களின் விளைச்சல் குறைந்ததால், விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஏப்ரல், மே மாதங்களில், வால் பேரிக்காய் மற்றும் பிளம்ஸ் பழங்கள் அதிகம் விற்பனைக்கு வரும்.கடந்தாண்டு காலநிலை மாற்றத்தால் மழை குறைந்து, வால்பேரி மற்றும் பிளம்ஸ் பழங்களின் மகசூலில் அடி விழுந்தது. பொதுவாக, ஏப்ரல் இரண்டாம் வாரத்தில், வால்பேரி அறுவடை செய்யப்பட்டு,

விற்பனைக்கு வந்து விடும். ஆனால், இந்தாண்டு மே, 2ம் வாரத்தில் தான் பேரிக்காய்கள் அறுவடை செய்யப்பட்டு, விற்பனைக்கு வந்துள்ளன. இதனால், கடந்தாண்டு, கிலோ -80 ரூபாய் வரை விற்கப்பட்ட வால் பேரி, இம்முறை 150 ரூபாய் வரை கடைகளில் விற்கப்படுகிறது.

பொலிவிழந்த பிளம்ஸ் பழ வியாபாரி கோபி கூறுகையில், "காலம் தவறிய மழையால், பிளம்ஸ் விளைச்சலிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் அறுவடைக்கு தயாராகும் பிளம்ஸ் பழங்கள், இம்முறை காலம் தள்ளி, மே முதல் வாரத்தில் தான் அறுவடைக்கு வந்தன. பிளம்ஸ் மரங்களில், பூக்கள் பூக்க துவங்கிய போது, பல இடங்களில் கடும் பனி மூட்டம் ஏற்பட்டதால், பூக்கள் உதிர்ந்து, மகசூலில் அடி விழுந்தது; தவிர, பிளம்ஸ் பழங்களில், கரும்புள்ளிகள் போன்று ஏற்பட்டு, காய்கள் சிறுத்து போயின. ஒரு கிலோ 100 ரூபாய்க்குள் விற்கப்பட்டு வந்த பிளம்ஸ் பழங்கள், தற்போது 150 ரூபாய் முதல்- 200 ரூபாய் வரை விற்கப்படுகின்றன. நீலகிரி பேரிக்காய் மற்றும் பிளம்ஸ் பழ விற்பனையை, சீசன் வியாபாரமாக செய்து வந்தோம். விற்பனை குறைந்ததால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை," என்றார்.

## முட்டை விலை 305 காசாக சரிவு

**நாமக்கல்:** தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 305 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 315 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசு குறைத்து, 305 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 347, பெங்களூரு, 315, மைசூர், 335, ஹைதராபாத், 283, மும்பை, 322, விஜயவாடா, 280, கோல்கத்தா, 295, பர்வாலா, 251, டில்லி, 264. இவ்வாறு

நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 46 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 65 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த, இரண்டு நாளில், 325 காசாக இருந்த முட்டை விலை, 20 காசு வரை குறைந்து, 305 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**


**<u>நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>**



**மேட்டூர்**: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 2768 கனஅடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையை ஒட்டிய வனப்பகுதிகள் மற்றும் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று

முன்தினம் வினாடிக்கு 1207 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 2768 கனஅடியாக அதிகரித்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடிநீர் திறந்து விடப்பட்டது.

## முட்டை விலை 315 காசாக குறைப்பு



**நாமக்கல்**: நாமக்கல்லில் நேற்றுமுன்தினம், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது.

இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் பங்கேற்று முட்டை விலையில் 10 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். அதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 325 காசில் இருந்து 315 காசாக குறைக்கப்பட்டது.

மற்ற மண்டலங்களில் முட்டை விலை குறைந்துள்ளதால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ முட்டைக் கோழியின் விலை ரூ.46 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழியின் விலை ரூ.65 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மற்ற மண்டலங்களில் நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விபரம்: (பைசாவில்) பெங்களூர்- 335, மைசூர்- 351, ஐதராபாத்- 293, மும்பை- 332, விஜயவாடா- 290, கொல்கத்தா- 300, பர்வாலா- 249, டெல்லி- 264 காசுகள்.

## 372 கிலோ தேங்காய் பருப்பு ரூ38 ஆயிரத்திற்கு விற்பனை

**பரமத்திவேலூர்**, : பரமத்திவேலூரில் நடந்த ஏலத்தில் 372 கிலோ தேங்காய் பருப்பு, ரூ37,934க்கு விற்பனையானது.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தாலுகா குப்பிச்சிப்பாளையம், கபிலர்மலை, வீரணம்பாளையம், வெங்கரை, செல்லப்பம்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் விளையும் தேங்காய் பருப்புகள், பரமத்திவேலூர் உழவர் சந்தையில் வாரம்தோறும் வியாழக்கிழமைகளில் செயல்படும் வேளாண்மை விற்பனை மையத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

இங்கிருந்து கேரளா, ஆந்திரா, கர்நாடகா, உத்தர பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு வெளிமாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. பரமத்திவேலூர் உழவர் சந்தையில் உள்ள வேளாண்மை விற்பனை மையத்தில் கடந்த வாரம் மொத்தம் 480 கிலோ தேங்காய் பருப்பு கொண்டு வரப்பட்டிருந்தது. ஒரு கிலோ ரூ102.16 காசுக்கு விற்பனையானது. மொத்தம் ரூ46,428க்கு விற்பனையானது.

இந்த வாரம் 372 கிலோ தேங்காய் பருப்பு ஏலத்திற்கு வந்தது. 1 கிலோ ரூ106.79பைசாவுக்கு விற்பனையானது. மொத்தம் ரூ37,934க்கு ஏலம் போனது.

## இடி, மின்னலுடன் பலத்த மழை

**தர்மபுரி,** : தர்மபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

கோடை வெயிலின் தாக்கத்தால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை புழுக்கத்தால் தூங்க முடியாமல் தவித்த வந்த நிலையில் ஆறுதலாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. தர்மபுரியில் கடந்த மூன்று நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கனத்த மழை பெய்தது. இதனால் ஏரி, குளங்களில் ஈரப்பதம் காணப்படுகிறது. வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. தர்மபுரி, தொப்பூர், நல்லம்பள்ளி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு, மாரண்டஅள்ளி, பென்னாகரம், ஒகேனக்கல், கலெக்ட்ரேட் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இம்மழையால் பூமி

குளிந்து காலையில் குளிர்ந்த காற்று வீசியது. கோடை வெயில் புழுக்கத்தில் இருந்த மக்களுக்கு மழை குளிர்ச்சியை தந்தது. தற்போது பெய்து வரும் கோடை மழையால் காய்கறி, மரவள்ளி, கரும்பு, மா விவசாயிகளுக்கு ஆறுதலாக உள்ளது. நேற்று மதியம் வெயில் சுட்டெரித்தது. மாலை வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது.

## தஞ்சை மாவட்டத்தில் 29 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி இலக்கு கலெக்டர் சுப்கலெக்டர் சுப்பையன் தகவல்

**கும்பகோணம்**, : தஞ்சை மாவட்டத்தில் 29 ஆயிரம் ஹெக்டேரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார். கும்பகோணம் அருகே உள்ள சாக்கோட்டை உயிர் உரங்கள் உற்பத்தி மையத் தில் கலெக்டர் சுப்பையன் நேற்று ஆய்வு செய்தார். அப்போது அசோஸ் பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா ஆகிய உயிர் உரங்கள் தயாரிக்கப்படுகிறது, தீவிர தரக்கட்டுப்பாடு பரிசோதனைக்கு உட்பட்டு தரமான உயிர் உரங்கள் மட்டுமே விவசாயிகளுக்கு வினியோகிப்பதை வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் ஒரு ஏக்கருக்கு 200 கிராம் அளித்தால் உயர் மகசூல் கிடைக்கும். சிக்கன உரச்செலவு, துரித விதை முளைப்பு, நீடித்தான நிலையான மண் வளம், மாசற்ற சுற்றுச்சூழல், நோய் பூச்சி எதிர்ப்பு திறன், உயர் மகசூல் ஆகியவைகள் இந்த உயிர் உரங்களால் கிடைக் கும். மாதத்திற்கு சராசரியாக 6 முதல் 7 டன் உற்பத்தி செய்வதாகவும், ஆண்டுக்கு சுமார் 1 லட்சம் டன் உயிர் உரங்கள் தயாரிப்பதாக தெரிவித்தனர்.

பின்னர் கலெக்டர் சுப்பையன் நிருபர்களிடம் கூறுகையில்,

தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டில் குறுவை பருவத்தில் 29 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் இதுவரை 4250 ஹெக் டேரில் நடவு பணிகள் முடிந்துள்ளது. மேலும் நடக்கவுள்ள நடவு பணிகளுக்காக 190 ஹெக்டேரில் நாற்றுகள் தயார் நிலையில் உள்ளது. தற்போது குறுவை நடைபெறாத இடங்களில் கரும்பு, பருத்தி, உளுந்து, பச்சைபயறு போன்ற பயர் வகை தானியங்கள் உற்பத்தியை விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடி செய்து வருகின்றனர். விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள், விதைகள் மாவட்ட

நிர்வாகத்தினால் போதியளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றார். முன்னதாக பாபநாசம் வட்டம் ரகுநாதபுரம் ஊராட்சியில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் தண்ணீர் எடுத்து செல்லும் குழாய் வழங்கும் திட்டத்தின்கீழ் உளுந்து சாகுபடிக்கு தெளிப்புநீர் பாசனம், உமையாள்புரம் ஊராட்சியில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் மூலம் 100 ஹெக்டேரில் 100 விவசாயிகள் சேர்ந்து உளுந்து சாகுபடி செய்யப்படுவது, கும்பகோணம் வட்டம் கருவளர்சேரியில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் பருத்தி சாகுபடி செய்யப்படுவதை பார்வையிட்டு தண்ணீர் வசதிகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

இதைதொடர்ந்து சாக்கோட்டை பசுந்தாள் உரப்பயிர் தக்கை பூண்டு விதை உற்பத்தி செய்யப்படுவது, ரூ.25 லட்சத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் விதை சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டார். அப்போது அந்த பணிகளை விரைந்து முடிக்க அறிவுரை வழங்கினார்.

கும்பகோணம் உதவி கலெக்டர் கோவிந்தராவ், வேளாண்மை துறை இணை இயக்குனர்(பொ) ராமதாஸ், துணை இயக்குனர் சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சொக்கலிங்கம், உதவி இயக்குனர் லட்சுமிகாந்தன் உடன் இருந்தனர்.

## நேரடி நெல் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள்

**திருவிடைமருதூர்**, : அதிக மகசூல் கிடைப்பதால் திருவிடைமருதூர் பகுதியில் நேரடி நெல் விதைப்பில் ஆர்வத்துடன் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விதை நெல் தெளித்து நாற்றை பயிராக்கி பின்னர் பிரித்து நடவு செய்து வருகின்றனர். இந்நிலையில் சமீபகாலமாக விவசாய கூலியாட்கள் நகர பகுதிக்கு கட்டிட வேலை, சாலைப் பணி மற்றும் கிராமப்புற பகுதிகளில் நடந்து வரும் 100 நாள் வேலை என பல்வேறு வேலைகளுக்கு சென்றுவிடுவதால் விவசாய வேலைக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டு நடவு மற்றும் நாற்றுபறி பணிகள் பாதிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள், பந்தநல்லூர், கதிராமங்கலம், நாச்சியார்கோயில், திருநாகேஸ்வரம், கிருஷ்ணாபுரம்

உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் லேசான ஈரப்பதத்தை கொண்டு விளை நிலங்களை புழுதி அடித்து பின்னர் உழவு இயந்திரம், விதைவிடும் உருளை, மனித ஆற்றல் வழிமுறைகளை பின்பற்றி நேரடியாக நெல் விதைப்பை விவசாயிகள் செய்ய துவங்கியுள்ளனர். இந்த முறையால் நாற்றுபறி, நடவு பணிகள் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும் விதை செலவும் பாதிக்கும்மேல் குறைந்துள்ளது. இதுகுறித்து கிருஷ்ணாபுரம் விவசாயி துரைராஜ் கூறுகையில், ஏற்கனவே விதை தெளித்து பின்னர் பயிராகிய நாற்றை பறித்து பிரித்து நடவு செய்து வந்தோம். இதற்கு ஏக்கருக்கு நாற்று பறிக்க 10 ஆண்கள், நடவு பணிக்கு 15 பெண்கள் தேவைப்பட்டது. தற்போது ஆள் பற்றாக்குறையால் நடைமுறை சம்பளத்தைவிட மிக அதிகளவில் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு வந்தது. நேரடி விதைப்பால் ஆட்கள் பற்றாக்குறை பெருமளவில் குறைந்து ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் மட்டுமே பராமரிப்பு செலவாகிறது. நேரடி விதைப்பில் அதிக மகசூல் கிடைக்கிறது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் நேரடி விதைப்பை ஆர்வத்துடன் செய்ய துவங்கியுள்ளனர்.

## தூத்துக்குடியில் கடல்வளம் ஆராய்ச்சி தொழில்நுட்ப பயிற்சி

**தூத்துக்குடி,** : மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் மாணவர்களுக்கு கடல் வளம் சார்ந்த ஆராய்ச்சி தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமும் தூத்துக்குடி காமராஜ் கல்லூரியும் இணைந்து நடத்தும் இளம் மாணவ விஞ்ஞானிகள் பயிற்சி முகாமின் ஒரு பகுதியாக மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் மாணவர்களுக்கு கடல் வளம் சார்ந்த ஆராய்ச்சி தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமில், முத்து சிப்பி வளர்ப்பு தொழில்நுட்பம், சங்கு வளர்ப்பு, மீன்பிடி தொழில்நுட்பத்தின் மேலாண்மை, கூண்டு வளர்ப்பு முறை மற்றும் கடல் உணவு ஏற்றுமதியை இந்திய பொருளாதார முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. பயிற்சியில் விஞ்ஞானி முனைவர் ஜெகதீஸ், மத்திய மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளையும், செயல்பாடுகளையும் விளக்கி கூறினார். மாணவர்கள் மீன்வள ஆராய்ச்சி துறைகள் சார்ந்த அறிவு பெற வேண்டும். அலையாத்தி காடுகளின் முக்கியத்துவம், தூண்டில் வளைவு திட்டத்தின் பயன்கள்

மற்றும் சுனாமி விழிப்புணர்வு குறித்து விளக்கினார். தாவர மிதவை உயிரிகளின் வளர்ப்பு, கடல்வாழ் உயிரின அருங்காட்சியகம் ஆகியவற்றை மாணவர்கள் பார்வையிட்டனர். பவள பாறைகள், கடல் விசிறிகள், கடல் பஞ்சுகள், கடல் ஆமைகள், மற்றும் அரிய கடல்வாழ் உயிரினங்களை பாதுகாக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் ஒருங்கிணைந்து செயல்பட மாணவர்கள் விழிப்புணர்வு செய்தல் வேண்டும். இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் மீன்வள அறிவியல் ஆராய்ச்சிக்கு தனிப்பட்ட குழு அமைத்து செயல்பட்டு வருவதை குறித்து இளம் மாணவர்கள் மீன்வளம் சார்ந்த துறைகளில் மேற்படிப்பையும், ஆராய்ச்சி துறைகளையும் தேர்வு செய்ய வேண்டும் என்றும் விளக்கமளிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காமராஜ் கல்லூரி விலங்கியல் துறை பேராசிரியர்களும், இளம் மாணவ விஞ்ஞானிகள் கோடை கால முகாமின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் நாகராஜன் மற்றும் உதவி பேராசிரியர் தேவராஜ் ஆகியோர் செய்து இருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சேலம் மாவட்டத்தில் தரமான விதை உற்பத்தி செய்யும் வழிமுறைகள்</u>**



**சேலம்,**

சேலம் மாவட்டத்தில் தரமான விதை உற்பத்தி செய்யும் வழிமுறைகள் குறித்து விதைச்சான்று உதவி இயக்குனர் தகவல் வெளியிட்டுள்ளார். சேலம் விதைச்சான்று உதவி இயக்குனர் ராஜதுரை வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:-

விதைப்பண்ணை

சேலம் மாவட்டத்தில் வீரபாண்டி, இடைப்பாடி மற்றும் சங்ககிரி வட்டாரங்களில் சுரபி, எம்.சியு.5, எம்.சியு.5(விடி) ஆகிய ரகங்களில் பருத்தி விதைப்பண்ணை அமைத்து, சேலம் விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைப்பண்ணைக்கு பதிவு செய்துள்ள விவசாயிகள், தரமான விதை உற்பத்தி செய்ய தொழில்நுட்பங்களை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட விதைப்பண்ணைக்கு விதைப்பு நாளில் இருந்து 75-ம் முதல் 105-நாட்களில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த விதைச்சான்று அலுவலரால் வயல் ஆய்வு மேற்கொள்ளப்படும். 75ம் நாளன்று செய்யப்படும் முதல் வயல் ஆய்வில் பயிர் விலகும் தூரம், பயிர் பரப்பு, கலவன் நிலை ஆகிய காரணிகள் கணிக்கப்படும். எனவே விதைப்பண்ணை வயல் தரம் நன்கு பராமரித்து கலவன் நீக்கி, ஆய்விற்கு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அளக்கும் முறை

இரண்டாம் ஆய்வில் கலவன் நிலை, மகசூல் காரணிகள் கணக்கிட்டு, மகசூல் அளவு கணிக்கப்படும். மூன்றாம் ஆய்வு அம்பார ஆய்வு ஆகும். விதை உற்பத்தியாளர்கள், விவசாயிகள் இல்லத்தில் பருத்தியை அளக்கும் விதமாக சதுரமாகவோ அல்லது செவ்வக வடிவிலோ அம்பாரம் இட்டு விதைச்சான்று அலுவலர், பருத்தி இருப்பு கணிக்கும் வண்ணம் குவியல் வைத்திருக்க வேண்டும். அறுவடை நிலை ஆய்வில் இருந்து, மூன்று மாதங்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட சுத்தி நிலையம் கொண்டு சென்று பருத்தியை இருப்பு வைக்க வேண்டும்.

சுத்தம் செய்யும் முறை

சுத்தி நிலைய விதைச்சான்று அலுவலர்ஆய்வு செய்து, அனுமதி வழங்கிய பின்பு, சுத்தி நிலையில் கொண்டு வந்த நாளிலிருந்து 3 மாதத்திற்குள் பருத்தியை அறவை செய்து, விதைகளை சுத்தம் செய்து, பகுப்பாய்வு மாதிரி எடுத்து அனுப்ப வேண்டும். ஆதாரநிலை ஒன்று விதை உற்பத்தி செய்யும் விதைப்பண்ணை விவசாயிகள் இனத்தூய்மை மாதிரியும் எடுத்து அனுப்ப வேண்டும். பகுப்பாய்வு முடிவில், முளைப்பு, தூய்மை, ஈரப்பதம் போன்ற காரணிகளில் தேர்ச்சி பெற்றால், அக்குவியல் விதைகளுக்கு சான்றட்டை பொருத்தும் பணி மேற்கொள்ள வேண்டும். விதைச்சான்று அலுவலரின் பரிந்துரையின் படி, விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் சான்றட்டை பெற்று, பகுப்பாய்வு நாளில் இருந்து 60 நாட்களுக்குள் சான்று பணியினை முடிக்க வேண்டும். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட சான்று பெற்ற விதைகளில் இருந்து சாகுபடி செய்யப்படும் பயிர் உரிய முளைப்புத்திறன், இனத்தூய்மை, புறத்துõய்மை, வீரியத்தன்மை போன்ற காரணிகளால் மற்ற விதைகளைவிட கூடுதல் மகசூல் கொடுக்கும். மேலும் நல்ல விதைக்கு விற்பனை செய்து கூடுதல் லாபம் பெற முடியும். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

## <u>கடந்த நிதி ஆண்டில் தேயிலை உற்பத்தி 8 சதவீதம் உயர்வு</u>



**புதுடெல்லி,** கடந்த நிதி ஆண்டில் தேயிலை உற்பத்தி 8 சதவீதம் உயர்ந்து 122 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டில் 114 கோடி கிலோ தேயிலை உற்பத்தி ஆகியிருந்தது.

அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் உற்பத்தி அதிகரித்ததால் நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தி வளர்ச்சி கண்டுள்ளது. இந்த இரண்டு மாநிலங்களும் சேர்ந்து 98 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்துள்ளன. இந்த மாநிலங்களில் மட்டும் உற்பத்தி 7 சதவீதம் உயர்ந்துள்ளது.

இந்தியாவின் தேயிலை உற்பத்தியில் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் 80 சதவீத பங்கினைக் கொண்டுள்ளன. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய தென் மாநிலங்களில் உற்பத்தி 13 சதவீதம் உயர்ந்து சுமார் 25 கோடி கிலோவை எட்டியுள்ளது.

## 2,000 லிட்டர் மானிய டீசல் வழங்க மீனவர்கள் கோரிக்கை



தொண்டி பகுதியில் 45 நாட்கள் தடைக்காலத் திற்கு பிறகு கடலுக்கு செல்ல மீனவர்கள் தங்க ளது படகுகளை தயார் செய்யும் பணியில் மும் முரமாக ஈடுபட்டுள்ள னர்.

2,000 லிட்டர் மானிய டீசல் வழங்க மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தடைக்காலம்

திருவாடானை தாலுகா அதிக கடற்கரை கிராமங் களை உள்ளடக்கிய தாலுகா வும். எஸ்.பி.பட்டினம் முதல் திருப்பாலைக்குடி வரை சுமார் 5 ஆயிரம் நாட்டுப்

படகு மீனவர்களும், சுமார் 500க் கும் மேற்பட்ட விசைப் படகு மற்றும் பெரிய அளவி லான நாட்டு வல்லங்கள் மூலம் ஆழ்கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர் களும் உள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் மீன்களின் இனப் பெருக்கத்திற்காக ஏப்ரல் 15-ந்தேதி முதல் மே 31-ந் தேதி வரை 45 நாட்களுக்கு மீன்பிடி தடைக்காலம் கடை பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நாட்களில் விசைப்படகு மீன வர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதில்லை.

இதனால் தொண்டி, சோழி யக்குடி, லாஞ்சியடி போன்ற மீனவ கிராமங்களில் விசைப் படகு மீனவர்கள் தடைக் காலத்தை பயன்படுத்தி தங் களது விசைப்படகுகளை கரையில் ஏற்றி படகுகளில் பழுது பார்த்தல், என்ஜின் மாற்றுதல், வர்ணம் தீட்டு தல் போன்ற பணிகளில் மும் முரமாக ஈடுபட்டு வருகின்ற னர். இந்த நிலையில் வரு கிற 31-ந்தேதி மீன்பிடி தடைக் காலம் முடிவடைவதால் பட குகளை தயார் செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வரு கிறது. மேலும் கடலுக்கு செல்ல மீனவர்கள் ஆர்வமு டன் உள்ளனர்.

<u>செலவு</u>

இதுபற்றி சோழியக்குடி, லாஞ்சியடி பகுதியை சேர்ந்த மீனவர்கள் கூறியதாவது:- தண்ணீரில் பயணம், கண்ணீ ரில் வாழ்க்கை, ஒவ்வொரு நாளும் துயரம் என்ற நிலை தான் இன்று வரை மீனவர்க ளுக்கு உள்ளது. அரசு 45 நாட் கள் மீன்பிடி தடைக்காலம் அறி விக்கிறது. மீனகளின் இனப் பெருக்க காலம் என்பதால் விசைப்படகு மீனவர்கள் மட் டுமே கடலுக்கு செல்ல அனு மதியில்லை. இதனால் எங்கள் விசைப்படகுகள் அனைத்தும் கரையில் ஏற்றி பழுது நீக்கும் பணியை மேற்கொண்டு வரு கிறோம். விசைப்படகுகளை கரையேற்றி சாதாரணமாக பழுது நீக்க வேண்டுமானால் சுமார் ரூ.2 லட்சம் தேவைப் படுகிறது. கூடுதலாக வேலை இருந்தால் ரூ.7 லட்சம் முதல் 9 லட்சம் வரை செலவாகி றது.

இந்த பணத்தை தயார் செய்ய முடியாமல் மீனவர்கள் தங்களது வீட்டில் உள்ள நகை களை அடகு வைத்தோ, அல் லது விற்றோ தான் செலவு செய்கின்றனர். பலர் கந்து வட்டிக்கு பணம் வாங்கி பட குகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சில மீனவர்கள் பணத்தை ஏற்பாடு செய்ய முடியாமல் படகினை

பழுது பார்க்காமல் அப்படியே போட்டு விடுகின்றனர். எனவே வசதி இல்லாத மீன வர்களுக்கு வங்கிகள் மூலம் அரசு கடனுதவி வழங்க வேண்டும்.

## கோரிக்கை

பெரிய அளவில் செலவு செய்து நம்பிக்கையோடு கட லுக்கு செல்லும் மீனவர்க ளுக்கு நல்ல மீன்பாடு கிடைத் தால் ஓரளவு சமாளிக்க முடி யும். இல்லையென்றால் மீன வர்களின் நிலை பரிதாபத்துக் குரியது. தடைக்காலத்தில் விசைப்படகுகளை மட்டுமே கடலுக்கு செல்ல அனுமதிப் பதில்லை. ஆனால் என்ஜின் பொருத்தப்பட்ட பைபர் பட குகள் கடலுக்கு சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகிறது. இவை ஆழ்கடல் வரை சென்று மீன்பிடித்து வருவ தால் தடைக் காலத்தில் மீன் இனப் பெருக்கத்திற்கு வழியில் லா மல் போய்விடுகிறது. எனவே மீன்பிடி தடைக்காலத்தில் அனைத்து படகுகளும் கட லுக்கு செல்ல அரசு தடை விதிக்க வேண்டும்.

தடைக்காலத்தில் அரசு வழங்கும் உதவி தொகையை உரிய காலத்திற்குள் வழங்கி னால் பல மீனவ குடும்பங்கள் சிரமப்பட வேண்டியதில்லை. இதுதவிர அரசு தற்போது வழங்கி வரும் டீசல் மானி யத்தை 2,000 லிட்டராக உயர்த்த வேண்டும். விசைப் படகுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் இன்சூரன்சு பிரீ மியம் வசூல் செய்கின்றனர். ஆனால் படகுகளுக்கு பதிப்பு ஏற்படும் போது நஷ்டஈடு வழங்குவதில்லை. இவ்வாறு பல நிலைகளில் விசைப்படகு மீனவர்கள் சிரமங்களை சந் தித்து வருகின்றனர். எனவே மத்திய-மாநில அரசு கள் மீனவர்களின் இந்த கோரிக் கையை பரிசீலிக்க வேண் டும். இவ்வாறு அவர்கள் கூறினார்.